# UNIVERSITY OF PERADENIYA

## CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

ශාස්ත්‍රවේදී උපාධි (බාහිර - නව නිර්දේශය) පරීක්ෂණය 200 මට්ටම - 2022
கலைத்தேர்வுப் பரீட்சை (வெளிவாரி–புதிய பாடத்திட்டம்) 200 வது தேர்ச்சி மட்டம் – 2022
**Bachelor of Arts (External - New Syllabus) Examination 200 Level –2022**

## ECNE 202: Macroeconomic Theory

කාලය පැය (03) තුනයි.
மூன்று) 03) மணித்தியாலங்கள்
Time: three **(03)** Hours.

නොපැහැදිලි අත් අකුරුවලට ලකුණු කපනු ලැබේ.
எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.
Marks will be deducted for illegible hand writing.

ප්‍රශ්න **05** කට පිළිතුරු සපයන්න.
**05 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.**
Answer **05** questions only.

මෙම ප්‍රශ්න පත්‍රයේ අඩංගු ප්‍රශ්න සංඛ්‍යාව 07 කි
இந்த வினாப்பத்திரத்தில் 07 வினாக்கள் உள்ளன .
There are 07 questions in the question paper.

---

1 அ) பேரினப்பொருளியலுக்கும் நுண்பாகப்பொருளியலுக்கும் இடையிலான வேறுபாடுகளைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

ஆ) பேரினப்பொருளியலின் பிரதான குறிக்கோள்களை விபரித்து அவற்றிற்கு இடையிலான விட்டுக் கொடுப்புக்கள் குறித்து ஆராய்க. (15 புள்ளிகள்)

2. அ) பெருக்கி, மொத்தக் கேள்வியின் வட்டி வீத உணர்திறன் ஆகியவை IS வளைகோட்டில் சரிவில் எவ்வாறு, பாதிப்புக்களைச் செலுத்துகின்றன என்பதனை சொற்களில் விபரிக்குக. (06 புள்ளிகள்)

ஆ) IS-LM மாதிரியுருவினைப் பயன்படுத்தி மொத்தக் கேள்வியினைத் (AD) தருவித்து, சொற்கள் மூலம் அதனை விளக்குக. (08 புள்ளிகள்)

இ) நீண்ட கால மொத்த நிரம்பல் வளையியானது (LRAS) நிலைக் குத்தானதாகவும், குறுங்கால மொத்த நிரம்பல் (SRAS) வளையியானது மேல் நோக்கிய சாய்வு கொண்டதாகவும் வரையப்படுவது ஏன் என விளக்குக. (06 புள்ளிகள்)

3. அ) மொத்தக் கேள்வி வளையி கீழ் நோக்கிய சாய்வினைக் கொண்டிருப்பது ஏன்? உமது விடையினைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

ஆ) 'பொதுவிலைமட்டத்தில் ஏற்படும் ஒரு மாற்றமானது மொத்தக் கேள்வி வளையியினை அன்றி மொத்தச் செலவு வளையியினையே பெயர்வடையச் செய்யும்'. இக்கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? உமது விடையினை விளக்குக. (08 புள்ளிகள்)

இ) மொத்த நிரம்பல் வளையியின் வடிவத்தினை விளக்குவதுடன், மேல் நோக்கிய சாய்வினைக் கொண்ட ஒரு மொத்த நிரம்பல் வளையியானது எவ்வாறு பெருக்கி விளைவினைப் பலவீனப்படுத்துகின்றது என்பதனையும் விபரிக்குக. (07 புள்ளிகள்)

4. அ) வாழ்க்கைச் சுழற்சிக் கருதுகோள் பற்றிய நுகர்வு நடத்தைக் கோட்பாட்டினை நுணுக்கமாக மதிப்பிடுக. (10 புள்ளிகள்)

ஆ) முழு வருமானக் கருதுகோள் மற்றும் நிரந்தர வருமானக் கருதுகோள் பற்றிய நுகர்வு நடத்தைக் கோட்பாடுகளை ஒப்பிட்டு வேறுபடுத்துக. (10 புள்ளிகள்)

5 அ) "கேள்வித் தூண்டற் பணவீக்கக் கோட்பாடானது, பொருளாதாரம் வெளியீடு, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் உயர்மட்டங்களை அடைந்து கொள்வதற்கு பணவீக்கம் ஓரளவிற்கு அவசியமானதாக இருக்கும் எனத் தெரிவிக்கின்றது. எவ்வாறாயினும், செலவுத்தூண்டற் பணவீக்க் கோட்பாடானது, பணவீக்கமானது மெய் வெளியீடு, வேலைமட்டம் ஆகியவற்றின் வீழ்ச்சியுடன் இணைந்திருக்கும் எனத் தெரிவிக்கின்றது." இக்கூற்றுடன் நீர் உடன்படுவீரா? உமது விடையினை விளக்குக. (10 புள்ளிகள்)

ஆ) வேலையின்மை ஒரு பிரச்சினையாகக் கருதப்படுவது ஏன்? இப்பிரச்சினையினைத் தீர்ப்பதற்கு கைக்கொள்ளக்கூடிய கொள்கை நடவடிக்கைகள் யாவை? (10 புள்ளிகள்)

6. அ) மொத்தக் கேள்வி (AD) மொத்த நிரம்பல் (AS) வளைகோடுகளைப் பயன்படுத்தி, வருமான மட்டம், பொது விலை மட்டம் ஆகியவற்றின் மீது, ஒரு விரிவுத் தாக்க நாணயக் கொள்கையின் குறுங்கால மற்றும் நீண்ட கால தாக்க விளைவுகளை விளக்குக. (10 புள்ளிகள்)

ஆ) மொத்தக் கேள்வி (AD) மொத்த நிரம்பல் (AS) வளைகோடுகளைப் பயன்படுத்தி, வருமான மட்டம், பொது விலை மட்டம் ஆகியவற்றின் மீது, ஒரு விரிவுத் தாக்க இறைக் கொள்கையின் குறுங்கால மற்றும் நீண்ட கால தாக்க விளைவுகளை விளக்குக. (10 புள்ளிகள்)

7. பின்வருவனவற்றுள் எவையேனும் **நான்கிற்கு (04)** சிறு குறிப்புக்கள் எழுதுக

அ. திரவப் பொறி

ஆ. வெளித்தள்ளல் விளைவு

இ. பணத்திற்கான உத்தேசக் கேள்வி

ஈ. பிலிப்ஸ் வளையி

உ. தரக் கடன் அல்லது தெரிவுக் கடன் கட்டுப்பாட்டுக் கருவிகள்

(தலா 05 புள்ளிகள்)

*************************************************************************************